உ

கடவுள் துணை.

கள்ளுகடைசிந்துயென்னும்

# குடியர்சிந்து.

புகையிலைச் சிந்து.




இவை - சிறுமணவூர்.

முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

சென்னை-இட்டா.

## பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னை-ஆச்சாரப்பன்தெரு.84-வது-நெ

Digitized by Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

# கள்ளுக்கடை சிந்து.

விருத்தம்.

நம்பின்னிருந்தகள்ளே நாடியையறிந்தகள்ளே
தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பரைக்கண்டகள்ளே
வம்புநீசெய்தாய்க்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளே
சொம்புபோல்குடுவைகள்ளேசோறுபோல்கொதிக்குங்கள்ளே
தங்கம்போலானகள்ளே தைரியங்கொடுக்குங்கள்ளே
எங்களைவளர்க்குங்கள்ளே யெங்கேபோய்யொளித்தாய்கள்ளே
சிங்கம்போலானகள்ளே ஜெயிலுக்கு-அனுப்புங்கள்ளே
பொங்கியேவருகுங்கள்ளே புறப்பட்டுவருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு.

ஜாடியே உனக்கொருகும்பிடு அந்தசாராயங் குடித்தாக்கால் பேதியெடுக்குது புட்டியேயுனக் கொருகும்பிடு அந்தபீரைக் குடித்தாக்கால்சோரைக் கெடுக்குதுகள்ளே உனக்கொருகும்பிடு அந்தகஞ்சா வடித்தாக்கால் நெஞ்சைவுலர்த்துது மரமே உனக்கொருகும்பிடு அந்த மதத்தையிழுத்தாக்கால் பலத்தைக்குரைக்குது எப்போவருவாயோகள்ளே உனக்கிதுஞாயமல்ல நீயெழுந்துவாகள்ளே.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு - ஈஸ்வரன்போலே - வந்துதேகள்ளு.

அநுபல்லவி.

வந்துதுபார்கள்ளு வாகனங் கருவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டிதள்ளிக்கொண்டு வந்து

சரணங்கள்.

ஆதிவிலேகளெல்லாம் அடிமாண்டுபோச்சுது
அஞ்சணு-ஆரணு படியொன்று-ஆச்சுது
சோதிதன்சுருக்கும் சூரியனுக்குமேது
சுள்ளைகடித்துக்கொண்டு - உள்ளுக்குள்விட்டால்
யெழும்புதேபோதை தலைக்குமேல்கைதூக்கி
கடிக்குதேபல்லை வந்து

Digitized by Roja Muthiah Research Library

ஆராணுபோனாலும் ஆட்டின்மயிரேபோச்சி
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்-சீச்சி
பாரில்பட்டையும்புத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பாட்டுகள்ளுஒருமூச்சி பாணந்தடுத்துபோச்சி - வந்
ரகுபதிகடைகள்ளு ராவெல்லாம்குடையுது
ரவுண்டுடாணுக்கள்ளு கிருக்குகள்வாங்குது
பறைச்சேரிகடைக்கள்ளு பாடுது-ஆடுது
பாழுஞ்சுடுகாட்டுக்கடைகள்ளு தலைக்கீழாய்துள்ளுது - வந்
இதுவென்னகள்ளு பலவதொட்டிகள்ளு
ஒழுவுதே - சொள்ளு
பெண்சாதியெதிர்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினாவென்றால் சொல்லையிலடிக்குது
தன்பேச்சிப்போல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடிக்குது - வந்
எடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதே - முறப்பு.

## குடியர்-அலங்காரம்-வெண்பா.

காலைக்குடியரெல்லாம் கவைக்குதவார்கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெரியனைப்போலலைவார்
வறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோ குடியருக்குத்தான்.

புரு- மூக்கிமுக்கிகஷ்டப்பட்டுகேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன்பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுபண்ணடி பெண்ணே
பாட்டாகள்ளுக்கொருபணந்தாக்கடி கண்ணே
பெ - கள்ளைமறந்திடடாகுடிக்கார பாவி
காலையில்குடியாதடாசதிகாரப் பாவி
பிள்ளைகுட்டிபெத்தயோடாசண்டாள பாவி
யின்னம்புத்திவல்லையோடாகுடிகார பாவி
புரு - சேனநாள்பழக்கமடிமுட்டாளு பெண்ணே
ஜென்மத்திலேவூரிப்போச்சேகெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தேனென்று யெண்ணாதே பெண்ணே
நாலுமூணுதலும்பரையாய் நடக்குது கண்ணே
பெ - குடிக்கேனென்று சத்தியங்கள்பண்ணையே பாவி
குடல்பழுத்ததென்று கதைசொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்குப்போதாதே பாவி
சாப்பிட்டாலும் வீண்சண்டைகள்செய்யாதே பாவி
புரு - மனவருத்தப்படுவதாலேகேளடி பெண்ணே
ராஜினமாகிலும்தின்னுவாரண்டி கண்ணே

Digitized by Roja Muthiah Research Library

துணதுணென்றுபேசாதடிமுட்டாளு பெண்ணே
துட்டுகூடகுறைந்துபேச்சிதூக்குது கண்ணே

பெ - பணம்போனாலும் போகுதையாயெந்தன் கணவா
பங்கியுண்டைபழக்கவேண்டாம் யெந்தன் கணவா
குணத்தின்படியே நடப்பேனையாயெந்தன் கணவா
கும்மாமட்டும்கொடுக்க வேண்டாம்யெந்தன் கணவா

புரு- கும்மாமட்டும்கொடுப்பதில்லேகேளடி பெண்ணே
குடிக்கமட்டும்ஒத்தைபணந்தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்று யெண்ணாதே பெண்ணே
சோத்துபானையெகிரிப்பூடுந்தவரினால் கண்ணே

பெ - சோத்துபானையெகிரிபோனால்கேளடா பாவி
உன்சூத்துதாண்டாகாஞ்சிப்போகும்குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தைமறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும்நெட்டிவிட்டுவந்தாயே பாவி

புரு- குடியருக்குசத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம்கேளடி கண்ணே
படியடித்துபோதைகொஞ்சம்காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்துவருவண்டி கண்ணே

பெ- பட்டைமூஞ்சியில்யிடிவிழுககுடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால்மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைதவீணாய்அழிக்காதே பாவி
காலங்கருப்பாணதினால்சொன்னேண்டா பாவி

புரு- பணம்போனாலும்சட்டம்போச்சிகேளடி பெண்ணே
பாட்டாயடித்தால்கையுங்காலுமுறைக்குது பெண்ணே
கணக்குபார்த்துகுடிக்காவிட்டால்கேளடி பெண்ணே
சாணைகையில்கூடக்கிட்டாது பெண்ணே

பெ - ஓயாகுடிகுடியாதடா-சண்டாளப் பாவி
உத்தியோகத்தில்மண்விழும்குடிகாரப் பாவி
ஏழைவயரெறியயெறியசதிகார பாவி
எப்படியும்நாசமாவாய்குடிகார பாவி

புரு- உத்தியோகம்போனாலெந்தன் சட்டம்போச் சடி
ஊர் நடமையில்லாவிட்டால்வெறியு மேதடி
எத்தனைபேர்யேமாளிகள்வூரில் பாரடி
எவனாகிலும்கொடுத்துபோறான்உனக்குயென் னடி

பெ - பஞ்சைபோலேகெற்றகல்விபடிக்காதே பாவி
பாரினுள்ளோரெல்லாம்வுன்னைபோல்குடித்தாரே பாவி
செஞ்சியேகாம்பரங்கவியைக்கேளடா பாவி
சுகப்படுவாய்புவிமீதில்குடிக்காதே பாவி

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 106

Digitized by Roja Muthiah Research Library

# கள்ளுக்கடை சிந்து.

## விருத்தம்.

பெருமானே தரிசனமே சொல்லக்கேளாய்
பேருனபச்சைமுளகா யுப்புங்கூட்டி
காடானநாக்கின் நுனி நடுவில்வைத்து
கள்ளதனைப்படியிலூற்றி நுரையைத்தள்ளி
அரகராவென்றுள்ளே செலுத்திவிட்டால்
ஆதிசிவனயன்மாலு மெதிரேநிற்பார்
பிரியமாய்மதுசெய்யு மருத்துவத்தை
பரிட்சித்துச்கொண்டவற்கு மோட்சந்தானே

நாதநாமக்கிரியை-பல்லவி.

சாதுகளைக்கெடுக்குதையா பாழுங்கள்ளுயிது

அநுபல்லவி.

சாதுகளைக்கெடுக்குது சாப்பிட்டால்வெறிக்குது
பாதைப்படுத்துது பவுஷைக்கெடுக்குது-சாது

சரணங்கள்.

பிரியமாயழைக்குதையா பாழுங்கள்ளுயிது
படிவாங்கிநெட்டுதையா பாழுங்கள்ளுயிது

பிரியமாயழைத்து நடிவாங்கிநெட்டுது
வெறிகொடுத்தாதிட்டுது வெளியேநெட்டிதள்ளுது சாது

கண்டவரைகூட்டுதையா யிந்தகள்ளு
கடன்வாங்கசெய்யுதையா யிந்தகள்ளு

கண்டவரைகூட்டுவது கடைகடைக்கு ஒடுது
சண்டையைவலிக்குது தெண்டங்கொடுக்குது சாது

காலையிலழைக்குதையா தலைநோவுகள்ளு
காப்புகட்டிதிரிகுதையா தலைநோவுகள்ளு

காலையிலழைக்குது கடையில்குந்தவைக்குது
வேலையைகெடுக்குது வீண்சண்டைபோடுது சாது

காசிருந்தாலழைக்குதையா பாழுங்கள்ளுயிது
கடன்கேட்டால்முறைக்குதையா பாழுங்கள்ளுயிது

காசிருந்தாலழைக்குது கடன்கேட்டால்முறைக்குது
மோசப்படுத்துது மூலையிலேவொரங்குது சாது

ஒரக்கங்கொடுக்குதையா கள்ளுயில்லாவிட்டால்
உட்கார்ந்துறங்குதையா அதுஊமையைப்போல்

Digitized by Roja Muthiah Research Library

தூக்கங்கொடுக்குது ஒருபடிமுறைக்குது
வெரியெடுத்தால்வெரியுது வேதம்படுக்குது சாது

வஞ்சனையால்சொல்லவில்லை யிந்தகள்ளுதான்
வழக்கத்தைசொன்னேனையா யிந்தமதுவைநான்

வஞ்சனையாம்யிதைவிட்டு வழிபடுவாய்புவிமீது
செஞ்சியேகாம்பரம்கவியை சித்தத்திலேவிதம்பாடு சாது

வேறுமெட்டு.

ஒகநெலகா படினபாடுவூரந்தா அடிகிசூடுஜாடியே கள்ளுஜாடியே' பிருபுட்டி செய்தமோசம் பிப்பாதன்னியைக் கேட்டுபாரு ஜாடியேகள் ளுஜாடியே,போசேடப்புடு சுருக்கெண்டாதி போயினவ்தல யேமிலேது புட்டியே கள்ளுபுட்டியே, கல்லிவச்சினமாடவினி காவிவாளுபயபடுந்தி காவடிகள்ளுகாவடி, இத்தனைநாள்பட்டபாடு யாரைக்கேட்டால் தெரிய ப்போகுது குடுவையே கள்ளு குடுவையே, சிறுமணவூர்முனிசாமி செ ப்பிசெப்பி நவ்விருடு மொந்தையே கள்ளு மொந்தையே.

நாதநாமக்கிரியை-பல்லவி.

கரமாயிபோச்சி புகலைப்பியாசத்தை
கற்றவர்பேச்சு,

அநுபல்லவி.

வரியுமதிகமாச்சி வாடுங்குடிகள்பேச்சி
பிரியமாய்சுருட்டு பொடியுங்கருப்பாச்சி-கரமா

சரணங்கள்.

கடனென்றுபொடிகேட்டால் காதைமுடுக்குது
கட்டும்பொடியானாலும் துட்டுக்குவொடர்ந்தது
பட்டணத்தில்புகலைப்பேச்சி பாழாயிபோச்சுது
பந்தர்புகலைப்பேச்சி யிந்திரம்பரக்குது
துட்டுக்கொருகரண்டி சிடிக்கைபொடியாச்சி
தொல்லையாம்புகலைக்கு பல்லோர்பரச்கலாச்சி
மட்டிபுகலைநேசங் கற்றதேபகையாச்சே
மறந்துவிடுவோமென்றால் மனமுங்கலங்கலாச்சி
புகலையின்பேச்சி காலணாகொடுத்தாலும்
ஒருயிலையாச்சி இப்போ
கள்ளுகடைசுருட்டும் கடையாய்பறந்துபோச்சி
காப்புக்கும்விலைமிஞ்சி கருப்பாய்பரக்கலாச்சி
தள்ளிவைத்தபுகலை தங்கம்குவிக்கலாச்சி
தம்படிக்கும்ஒருசுருட்டும் சின்னதாச்சி
தூயாமல்சுருட்டி பிடிப்போர்ஒறங்கலாச்சி
உதவாதகோர்வையும் பதமாய்ஒத்துப்போச்சி

Digitized by Roja Muthiah Research Library

வாயிலடக்குவோர்க்கு வயறும்யெரிந்துபோச்சி
வாட்டமாய்த்தெட்டிடம் பார்த்தவர்பேச்சி

கருவலாய்ப்போச்சி கெஞ்சாயிழுப்பேரர்கள்
கலங்கிடலாச்சி

ஆமூர்புகலேபேச்சி அதிகாரம்பெரிதாச்சி
அதற்குமுன்கோர்வை பாய்ந்துயெகரலாச்சி
ஊத்தங்கரைபுகலே பார்த்ததேவிலேயாச்சி.
உள்ளூர்புகலேயெல்லாம் நல்லவிலேயுமாச்சி

பந்தரின்புகலே சொன்னதுசொன்னவிலே
துள்ளுதேமேலே

அஞ்சாமல்புகலேக்கு அதிகாரம்பெரிதாச்சி
அவனியிலதுசேஷ்டை அடக்கிறைப்சுகமாச்சி
செஞ்சியேகாம்பரங் கவியாலெழுதலாச்சி
சீமையிலுள்ளோர்கள் பார்த்துமகிழலாச்சி - கா

ஆனந்தக்களிப்பு.

பரிபூரணானந்தபோதம் னேற்று
பகலெல்லாம்மழைபெய்து சுவரெல்லாமோதம் தரு

சாறுயபுட்டியைநம்பு-அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லேகெம்பு-யாரை
கண்டதேகுத்திறல் கயனுதேகெம்பு தரு

பெற்றதாய்சொல்லேக்கேளாதே-உந்தன்
பெண்டாட்டிபிள்ளேக்கி கஞ்சிவார்க்காதே
உற்றாரைஊரில்சேர்க்காதே உந்தன்
ஆயுசுக்குமொருதருமஞ்செய்யாதே தரு

பெற்றதாயாரை தடிகொண்டுமொட்டு
பெற்றதகப்பனேயும்பாட்டனேயும் வீட்டைவிட்டோட்டு
உற்றாரைவுறவாரைமாட்டு-இந்த
ஊரிலுள்ளோர்மேலே கட்சியுங்கட்டு

தருமஞ்செய்யாதிருமனமே-நானே
கருமத்தைசெய்தாலே கடைதேறலாமே.

முற்றிற்று.

Digitized by Roja Muthiah Research Library